பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
சென்னை – 28.

சுற்றறிக்கை

எண்.30103/எல்2/2023 நாள்:18.08.2023

பொருள்: சந்தை வழிகாட்டி மதிப்பில் – குறைந்தபட்ச மதிப்பு நிர்ணயம் செய்தல் – தொடர்பாக.

பார்வை: மையமதிப்பீட்டுக்குழு கூட்ட நிகழ்ச்சி குறிப்பு எண்.30103/எல்2/2023 நாள்:16.08.2023.

.....

தமிழ்நாட்டில் வழிகாட்டி மதிப்புகள் விவசாய நிலங்களுக்கு ஏக்கரிலும், மனை நிலங்களுக்கு சதுரடியிலும் நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் பெரும்பாலான இடங்களில் வெளிச்சந்தை மதிப்பை விட மிக மிக குறைவாக உள்ளன. வங்கிகள் வழிகாட்டி மதிப்பையொட்டியே கடன் வழங்கும். இதனால், மனை நிலம் வாங்குபவர்கள் வங்கிகளில் தேவையான அளவிற்கு கடன் பெற முடியாத நிலை உள்ளது.

இதனை தவிர்ப்பதற்காகவும் வழிகாட்டியில் குறைந்தபட்ச மதிப்பை நிர்ணயம் செய்வதற்காகவும் 16.08.2023 அன்று மைய மதிப்பீட்டுக்குழு கூட்டம் கூட்டப்பட்டது. இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களின் விரிவான விவாதத்திற்கு பின் சொத்து அமைந்துள்ள பகுதிகளைப் பொருத்து பின்வருமாறு குறைந்தபட்ச மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

வ. எண்	பகுதி	குறைந்தபட்ச குடியிருப்பு மதிப்பு	குறைந்தபட்ச விவசாய மதிப்பு
1	சென்னை மற்றும் கோயமுத்தூர் மாநகராட்சி	சதுரடி ரூ.1000/–	––
2	ஆவடி, தாம்பரம், ஒசூர் மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சி	சதுரடி ரூ.800/–	––
3	ஈரோடு, திருப்பூர், மதுரை, திருச்சி, சேலம், நாகர்கோவில் மாநகராட்சி	சதுரடி ரூ.700/–	––
4	திருநெல்வேலி, திண்டுக்கல், வேலூர், கரூர் மாநகராட்சி	சதுரடி ரூ.600/–	––
5	தூத்துக்குடி, தஞ்சாவூர், சிவகாசி, கும்பகோணம் மாநகராட்சி	சதுரடி ரூ.500/–	––
6	கடலூர் மாநகராட்சி	சதுரடி ரூ.400/–	––
7	அனைத்து நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மனையிடங்களுக்கு குறைந்தபட்ச மதிப்பு	சதுரடி ரூ.300/–	––

Verified RedEstate ™

8	அனைத்து பேரூராட்சி பகுதியில் உள்ள தெருக்களுக்கு குறைந்தபட்ச மதிப்பு	சதுரடி ரூ.200/-	--
9	காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, கோயமுத்தூர், ஈரோடு, சேலம், மதுரை, கிருஷ்ணகிரி, கரூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கும் மற்றும் இம்மாவட்டங்களில் உள்ள பேரூராட்சி பகுதிகளில் உள்ள புல எண்களுக்கான குறைந்தபட்ச மதிப்பு	சதுரடி ரூ.100/-	ஏக்கர் ரூ.5,00,000/-
10	இதர மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கும் மற்றும் இம்மாவட்டங்களில் உள்ள பேரூராட்சி பகுதிகளில் உள்ள புல எண்களுக்கான குறைந்தபட்ச மதிப்பு	சதுரடி ரூ.50/-	ஏக்கர் ரூ.2,00,000/-

மேற்கண்ட குறைந்தபட்சம் நிர்ணயிக்கப்பட்ட மதிப்புகள் இணையதளத்தில் நேரடியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட குறைந்தபட்ச மதிப்பிற்கு கீழ் வேறு மதிப்புகள் ஏதும் உள்ளனவா என்பதை சரிபார்த்துக்கொள்ள சம்பந்தப்பட்ட துணைப்பதிவுத்துறை தலைவர்கள், நிர்வாக மற்றும் தணிக்கை மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் சார்பதிவாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்-18.08.2023
பதிவுத்துறை தலைவர்,

//ஆணைப்படி//

18/8/2023
மாவட்டப்பதிவாளர்(வழிகாட்டி).

18/8/23

பெறுநர்:
1)அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள்,
2)அனைத்து மாவட்டப்பதிவாளர்கள், நிர்வாகம் மற்றும் தணிக்கை,
3)அனைத்து சார்பதிவாளர்கள்.

நகல்:
பதிவுத்துறை தலைவர் அலுவலக உயர் அலுவலர்கள்,
முக்கிய ஆணை கோப்பு.

Verified RealEstate™